**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.892/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | ராஜக்குமாரி |
| Father's Name/Husband Name: | நடராஜன் |
| Village : | காரியனூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 3 மற்றும் 4 ஆஜர். எதிரிகள் 1, 2, 5, 6 ஆகியோர் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய விவசாய நிலம் பில்லாங்குளத்திலிருந்து காரியனூர் செல்லும் ரோட்டில் உள்ளது. எதிரி கங்காதரன் என்பவர் மாயவேல் என்பவரிடம் நிலத்தை வாங்கி குத்தகைக்கு ஓட்டி வருகிறார். அந்த நிலத்தை ஒட்டினால் போல் வீரபாண்டியன் என்பவரது நிலமும் உள்ளது. வீரபாண்டியன் நிலத்தில் உள்ள வேப்பமரத்தின் நிழல் கங்காதரன் காட்டில் விழுவது சம்மந்தமாக இருவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது.

சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நானும் எனது கணவர் நடராஜன் இருவரும் காட்டில் வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் சுதாவிடம் வேப்பமரத்தின் கிளைகளை வெட்டுமாறு சொன்னார்கள். சுதா தற்போது முடியாது என்று சொன்னதால் அனைத்து எதிரிகளும் சுதாவை பார்த்து கெட்ட வார்த்தையால்

பேசினார்கள், எதிரி மகாலட்சுமி சுதாவின் நைட்டியை பிடித்து இழுத்து கீழே தள்ளி அடித்தார். மற்ற எதிரிகளும் சுதாவை கெட்ட வார்த்தையால் திட்டி அடித்தார்கள். பிறகு காயம்பட்டவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate
Additional Mahila Court,
Perambalur.